
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal)

ISSN: 2582-399X

2



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:6 Issue :21 January 2024*

கோட்டை:6 வாயில்:21 ஜனவரி 2024

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஸ்டீபன்

முனைவர் ஓ முத்தையா

முனைவர் உமாதேவி

முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி

முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்

முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி

முனைவர் பொ. சுரேஷ்

முனைவர் ப.தனஞ்செயன்

கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்

முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்

பேரா. முனைவர் வீ.செல்வகுமார்

முதுமுனைவர் *V.*வெங்கட்ராமன்

முனைவர் போ.கந்தசாமி

முனைவர் *P.*பாண்டிக்குமார்

முனைவர் ந. குமாரி

முனைவர் தயாநிதி

முனைவர் சந்திரசேகர்

---

## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

## இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

## முதன்மை ஆசிரியர்

**பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்**



**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# நன்றி

**அனைவருக்கும் வணக்கம்**

**நமது அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் ஆறாவது ஆண்டில் (2024) அடி எடுத்து வைக்கின்றது. எங்களுடன் பயணித்த அனைத்து பேராசிரியர் பெருமக்களுக்கும், துறைசார் வல்லுநர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் எங்களது பணிவான நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம். தொடர்ந்து உங்களது ஆதரவை எங்களுக்கு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். நன்றியும் பேரன்பும்.**

*Hi everyone*

*Aran Internaitional e Journal of Tamil Research continuings way into sixth year(2024) . We area greatful to all the professors,academics and research students who travelled with us. We warmly request you to continue to support us . Thank you with Love.*


**அன்புடன்**

**முனைவர். பிரியாகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்**

*www.aranejournal.com*

*aranjournal@gmail.com*

*PH: +917299587879*

# அகத்தினுள்

பரதநாட்டிய வளர்ச்சியில் நட்டுவாங்கமும் நட்டுவனாரும்
கலாநிதி (திருமதி) துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

சுவாமி விபுலானந்தரின் நோக்கில் வடமொழியும் தமிழும்
திருமதி ஜெயவதனி .ஜலகோபன்

சி. சிவசேகரத்தின் புதுக்கவிதை விமர்சனங்கள் ஓர் ஆய்வு
கோ.குகன்

சமூகவியல் நோக்கில் நா. முத்துக்குமார் கவிதைகள்
ரா.ஸ்ரீபிரியா

யுகபாரதி கவிதைகளில் குடும்பம் மற்றும் சமூக உறவுகள்
தீ.மகேஸ்வரி

சமுதாயப் பிரதிபலிப்பும் கந்தர்வனின் படைப்பாளுமையும்
முனைவர். அ.புஷ்பா

சூழலியல் நோக்கில் இலையுதிர் நிர்வாணங்கள்
க.ஜோதிலட்சுமி லோ.

இயந்திரம் நாவலில் ஆட்சி இயந்திரம்
முனைவர் ரெ.சுகிதா ராணி

மாயமான் - குடும்ப அறமும் தொழில் அறமின்மையும்
முனைவர் செ.சாந்தி

நாகம்மாள் புதினத்தில் புதினக்கூறுகள்
ச. அன்புத்தங்கம்

கவிஞர் தங்கம் மூர்த்தியின் கவிதைகளில் பெண்ணியச் சிக்கல்கள்
க.உஷாநந்தினி

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**தேவிபாரதி கட்டுரைகளில் மனித வாழ்க்கையின் இயங்குதளம்**
**த.சிந்துஜா**

**யாழ்ப்பாணம் மற்றும் முல்லைதீவுப் பிரதேசப் பாடசாலைகளில் கட்டிளமைப் பருவ மாணவர்களிடையேயான வன்போக்கு நடத்தை பற்றிய ஒப்பீட்டு உளவியல் ஆய்வு**
**பிரம்மியா சண்முகராஜா**

**மனித உளவியலில் தொலைக்காட்சி விளம்பரங்கள் ஏற்படுத்தும் சாதக பாதக தன்மைகள்**
**திரு.விசுமாப்போடி சசிகரன்**

**ஊடாடும் வகுப்பறை கருவிகள்**
**முனைவர் ச.சந்திரகலா**

**The Impact of Online Instruction on Academic Performance**
**U. Thulasivanthana**

**திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில் கல்வெட்டுகளில் தொழில் குடிகள்**
**ஜெ.விஜயகுமார்**

**கலையியல் நோக்கில் கங்காதரமூர்த்தியின் படிமக்கலை**
**பி.தனசீலன்**

**கலிங்க மாகோன் - மீளாய்வு**
**எஸ்.கே. சிவகணேசன்**

**TRANSFORMATION OF RURAL INDIA THROUGH RURAL ENTREPRENEURSHIP**
**Dr. N. UNNAMALAI SANGEETHA**



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# தமிழ்

# கவிஞர் தங்கம் மூர்த்தியின் கவிதைகளில் பெண்ணிய சிக்கல்கள்

**( *Kavignar Thangam Moorthiyin Kavithaikalil Penniya Sikkalkal* )**

**கட்டுரையாளர்**

**க.உஷாநந்தினி**

*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்*

*அ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி (தன்னாட்சி ),*

*பூண்டி*

**ஆய்வு நெறியாளர் :**

*முனைவர் ப.பாலமுருகன்*

*ஆய்வு நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*

*அ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி (தன்னாட்சி ),*

*பூண்டி - 6135003*

**ஆய்வுச்சுருக்கம் ;**

*கவிஞர் தங்கம் மூர்த்தியின் கவிதைகளில் சமுதாயம் சார்ந்த கவிதைகள் பல இடங்களில் இடம்பெற்று இருப்பினும் குறிப்பாக பெண்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்கள் (சிக்கல்கள்) பற்றி அதிக அளவில் எடுத்துரைத்துள்ளார். அவருடைய கவிதைகளில் குறிப்பாக வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு ஏற்படக்கூடிய உடல் ரீதியான, மன ரீதியான, சூழல் ரீதியான சிக்கல்கள் பற்றி அதிக அளவில் அவரது படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார் என்பதனை இக்கட்டுரையின் மூலம் காணலாம். ஆண் பெண் சமத்துவம் பேசும் உலகில் நாம் வாழுகிறோம். ஆனால் இன்றும் குடும்பத்திலும், சமூகத்திலும், வேலை பார்க்கும் இடங்களிலும் பெண் என்பவர் இரண்டாம் நிலையாகவே பார்க்கப்படுகிறார். இதுகுறித்து தனது கவிதையில் கவிஞர் உக்கிரமான கோபத்துடனும், மிக நையாண்டியுடனும் சுட்டிக்காட்டுகிறார். இக்கட்டுரையில் 1. முன்னுரை, 2. அம்மாவின் உறவும் உணர்வும், 3.ஊதியத்தில் பாரபட்சம், 4. வறுமையின் கொடுமை, 5. தினசரிப்போராட்டம், 6 முடிவுரை ஆகிய தலைப்புகள் வாயிலாக விளக்கப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள் ;**

**கவிஞர் - தங்கம் மூர்த்தி - கவிதை பெண்ணியம் - சிக்கல்**

## *Abstract:*

*Poet Thangammoorthyis Poetry Contins Sociieal Problems in Many Places. Poet he has highlited the Problmes that happens especially to Women. In his Poems, especially do women.who go tho work about wage discriminitation.And explotatiionof labour in the family and ineblity to talk about problems have been expressed in hiss works.we live in the world where men and women talk about equality.But even today women are seen a seconlary in the family, society and work this place.The poet points out in his poem with firce.anger and with great satire. In this artcle kavignar wrote his views in the following topies.1.introduetion, 2.monthers relation ship and feelings 3.discrimination in wages 4.cruelty of poverty 5. Daily struggle 6.conclusion*

## *Key words*

*Kavigar - Thangam moorthy - kavithai - feminism problem*

**முன்னுரை :**

கவிஞர் தங்கம் மூர்த்தியின் கவிதைகளில் சமுதாயம் சார்ந்த கவிதைகள் பல இடங்களில் இடம்பெற்று இருப்பினும் குறிப்பாக பெண்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்கள் பற்றி அதிகமாக குறிப்பிட்டுள்ளார். அதில் பெண்களுக்கான சிக்கல்கள் பல இருப்பினும் வேலைக்குச் செல்லும் பெண்களை மையமாகக் கொண்டு அவர்களுக்கு உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் சூழல் காரணமாகவும், வறுமையின் காரணமாகவும் இடம்பெறும் கவிதைகளில் சிக்கல்கள் அதிகமாக இருப்பதை அவருடைய இக்கட்டுரை மூலம் காணலாம்.

” பெண் என்பவள் இந்த சமூகத்தின் ஜீவ நதி. ஜீவநதிகள் இல்லை என்றால் சமூகமே வரண்டு விடும். பெண்களுக்கான முன்னேற்றமே சமுதாய முன்னேற்றம்”1. “ பெண்கள் வீட்டின் கண்கள்” என்றார் பாரதிதாசன். பல வருடங்களாக பெண்ணுரிமை பற்றி பேசி வந்தாலும் கூட பெண்களுக்கான அங்கீகாரம் கிடைத்திருக்கிறதா என்றால் கேள்விக்குறியாகத் தான் இருக்கிறது.

தங்களுடைய படைப்புகள் மூலம் பல மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள் கவிஞர்கள் தான். பாரதி, பாரதிதாசன், கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை என அத்தனை பேரும் பெண் உரிமை பற்றி தான் பேசி வந்திருக்கின்றனர். பட்டிமன்றங்கள், விவாதங்கள், சட்டங்கள் என அனைத்து வழிகளிலும் பெண்களுக்கான முக்கியத்துவம் கொடுத்து தான் வருகின்றனர். ஆனால் இவற்றுக்கான செயலாக்கம் என்பது இருக்கிறதா என்றால் சற்று யோசிக்க வேண்டியதாக இருக்கும்.

**அம்மாவின் உறவும் உணர்வும் :**

''கவிதை என்பது அனைத்து உள்ளங்களையும் கொள்ளை கொள்வது, படிப்பவர்களின் எண்ணத்தைத் தூண்டி அந்த கருவிற்கு வலுச் சேர்க்கக் கூடியது''. அந்த வகையில் பெண்களின் எண்ணங்களையும் அவர்களின் கருத்துக்களையும் தெள்ளத்தெளிவாக படிப்பவர்களின் மனதில் விதைக்க கூடிய ஆற்றல் படைத்தவர்கள் மத்தியில் கவிஞர் தங்கம் மூர்த்தியும் ஒருவர். இவருடைய கவிதைகளில் கருத்துக்களும், துள்ளல்களும், எள்ளி நகையாடுதலும் பலவாறாக வெளிப்பட்டு வரும். அந்த வகையில் இவர் கவிதைகளில் பெண்ணிய சிந்தனைகளையும் சிக்கல்களையும் பற்றி ஆழமாக பேசிச் செல்கிறார்.

'' அயல்நாட்டில்
உழைத்துப் பணம்
அனுப்பினான்
அம்மா
சிரமப்படாதிருக்க,
அயல்நாட்டில் மகன்
சிரமப்படுவதை நினைத்து
அழுது கொண்டிருந்தாள்
அம்மா '' ( பக் 27)

இன்றைய காலகட்டத்தில் அதிகப் பொருள்களுக்கு ஆசைப்பட்டு கணவனையோ, மகனையோ குடும்பத்தில் ஏற்படும் செலவினங்களைச் சமாளிக்க, பெண் பிள்ளைகளின் திருமணச் செலவை சமாளிக்க வெளிநாட்டு வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கிறார்கள் பெண்கள். அப்படியாக ஒரு பெண் தன் மகனை அயல்நாட்டிற்கு பொருளீட்ட அனுப்பிவிட்டு அவள் படும் வேதனையை அந்த கவிதை மூலம் ஆசிரியர் வெளிப்படுத்துவது மனதை வருத்துவதாக உள்ளது.

வேலைக்குச் செல்லும்
அம்மாக்களின்
வியர்வையை முகர்ந்தும்
முகம் மலர்கிறார்கள்
குழந்தைகள். ( பக் 66 )

என்ற கவிதையில் அம்மா என்னும் பெண் ஆகச் சிறந்த கருணையின் வடிவமாகவும், தங்களது குழந்தைகளுக்க்கு பாசத்தையும், நேசத்தையும் அள்ளித்தரும் தேவதையாக விளங்கிறாள் என்பதைச் சுட்டிக்காட்டுக்கிறார். தன் தாயின் உடலிலில் இருந்து உழைத்த் களைத்துப்போய் சிந்தும் வியர்வைத் துளிகள் குழந்தைகளின் முகங்களில் மலர்ச்சியை ஏற்படுத்துகிறது என்பதை விளக்குகிறது. தாய் குழந்தையின் ஆழமான உறவையும், உணர்வுகளையும் நம்முன் காட்சியாய் மிளிரச்செய்கிறார் கவிஞர்.

*1.* **ஊதியத்தில் பாரபட்சம்**

கொத்தனாரை விட

குறைவான கூலி தான்

சித்தாளுக்கு

பெண் என்றால்

பேயும் இரங்கும் ( பக் 45 )

என்ற கவிதையில் சமூகத்தில் பெண்களுக்கான சம்பளம் என்றும் ஆணுக்கு சரி நிகராக முடியவில்லை என்பதை இந்த கவிதையின் வாயிலாக சம அந்தஸ்து எப்பொழுதும் ஏற்படுவதில்லை சம ஊதியம் கொடுப்பதும் இல்லை. கொத்தனாரை விட சித்தாலுக்கு சம்பளம் குறைவாகத்தான் தரப்படுகிறது என்பதை ஆங்கில வார்த்தையில் தன் கேலிப்பேச்சால் தன் கவிதையில் கையாண்டுள்ளார்.

உச்சி வெய்யிலில் ( பக் 38,சிபாரிசு ) எனத் தொடங்கும் கவிதையில் பெண்களின் கடும் உழைப்பில் வரும் வருமானத்தை கணவன்மார்கள் குடித்தே அழிப்பதை மிக தத்ரூபமாக பதிவு செய்கிறார். மேலும் உண்ண வழியில்லாமல் இருந்தாலும், வேலையில்லையென்றாலும் பெண்கள் தங்களை வறுத்தி பெற்று வரும் சம்பாத்தியத்தை கணவன்மார்கள், சகோதரர்கள் ஊதாரித்தனமாக செலவு செய்வதை எள்ளி நகையாடும் வகையில் கவிதை எழுதியிருப்பது நையாண்டின் உச்சம் என்று சொல்லலாம். பெண்களின் உழைப்பை உன்னதப்படுத்துவதும், அதே நேரத்தில் பெண்களின் உழைப்பை சுரண்டுவதை தனது எளிமையான வார்த்தைகளால் Sஉட்டிக்காட்டுகிறார்.

**வறுமையின் கொடுமை :**

வறுமையின் கொடுமையைப் பற்றி கவிஞர் ஒரு கவிதையில் ” கவிதை எழுதுவிங்களாமே... என்னைப் பற்றியும் எழுதுவீங்களா.......என்று துவங்கும் கவிதை நம் மனதை கணக்கச் செய்கிறது. கண்களை குளமாக்குகிறது. ஒரு குழந்தையின் வறுமையை நாட்டின் அவமானகாகக்

தனது கவிதை வரிகளால் உணர்த்துகிறார். கவிதையின் இடையில் " வாரம் இருமுறை /என் வாகனத்திற்கு /பெட்ரோல் நிரப்பும் பெண் கேட்டாள் என்ற வரிகளைத் தொடர்ந்து / ஒருநாள்/ விடுமுறை எடுத்தாலும் / திணறிப் போகும் / குடும்ப வாகனம்.

ஒருநாள் வேலைக்குச் செல்லவில்லையெனில் குடும்பமே இயங்காது மொத்தக் குடும்பத்தின் பாரமும் ஒரு பெண் குழந்தையின் மீது இறக்கி வைக்கப்பட்டுள்ளது. படிக்க வேண்டிய வயதில் பணிக்கு செல்வதையும், பணி செய்யும் இடங்களில் பெண்களுக்கு வரக்கூடிய துன்பங்களையும், கவிஞர் கவிதையின் வாயிலாக எடுத்துரைக்கிறார். மேலும் வறுமையால் மனமும், உடலும் எவ்வளவுதான் சோர்ந்து இருந்தாலும் துன்பப்பட்டாலும் வேலை என்பதும் சம்பளம் என்பதும் எவ்வளவு தேவை என்பதை அந்த சிறுமியின் வாயிலாக எடுத்துக்காட்டுகிறார்.

**தினசரிப் போராட்டம்**

வீடாக இருந்தாலும் சரி, நாடாக இருந்தாலும் சரி பெண்களின் வாழ்க்கை என்பது போராட்டக் களமாகவே இருக்கிறது. ஆணாதிக்க சமூகத்தில் ஆண்கள் சிறு துரும்பைக்கூட அசைக்கத் தயாரில்லை.. ஆண் பெண் சமத்துவம் என்பது வெறும் வெற்றுப்பேச்சாகவே இருக்கிறது. நம் அடிப்படை வசதிக்கும் போராடும் நிலையே உள்ளது. நமக்குத் தேவையானதை நாமே போராடி பெறும் சூழல் உள்ளது. ட்டின் நிலையை ஒரு கவிதைக் காட்சி மூலம் மிகச் சிறப்பாக விளக்குகிறார் கவிஞர்.. வீட்டிலும் வெளியிலும் பெண்களின் நிலையானது போராட்ட களமாகவே இருக்கிறது என்பதை

வீதியில் இறங்கிப் போரிடத்

துணிந்தனர் பெண்கள் —

தண்ணீர் லாரி. (பக் 34, முதலில் பூத்த ரோஜா )

என்ற கவிதையில் எதற்காக வாழ்வது, தேவையின் பொருட்டு பெண்கள் போரிட்டுக் கொண்டே இருக்கின்றனர் என்று தன் கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

பெண்களின் அழகுக்கே முதலிடம் கொடுத்த கவிஞர்களுக்கு மத்தியில் அவர்களது உணர்வுக்காகவும் பாடியவர் பாரதி. அந்த வரிசையில் கவிஞரும் ஒருவர். ஒரு கவிதையில்

அவனுடன் சண்டை

அமைதியாக இருந்தாள் -

பாத்திரங்கள் பேசின... ( பக் 32, முதலில் பூத்த ரோஜா )

என்ற கவிதையில் பெண்கள் தங்களுடைய மனப் பிரச்சனைகளை பேசக்கூடிய உரிமை இல்லாததால் தங்களின் கருத்துக்களைக் கூற இயலவில்லை. அந்த இயலாமையின் காரணமாக

தன் கோபத்தை நேரடியாக காட்ட முடியாமல் பாத்திரங்களை போட்டு உடைத்து அதன் வாயிலாக வெளிப்படுத்துகிறாள் என்று பெண்களின் உணர்வுகளைப் பற்றி கவிஞர் கூறுகிறார்.

**முடிவுரை :**

இந்த பிரபஞ்சத்தில் முதலில் மதிக்கப்பட வேண்டியது பெண்மை. உயிர்களையும் உணர்வுகளையும் உருவாக்கித் தரும் கலைக்கூடமாக திகழ்வது பெண்மை. மனிதனாக இருந்தாலும் மற்ற உயிர்களாக இருந்தாலும் எல்லாவற்றிலும் பெண்மைக்கே முதலிடம். தன்னை உயர்த்திக் கொண்டு பிறருக்கு சேவையாற்றும் பெருமை பெண்களுக்கு மட்டுமே உண்டு. ஆகவே அத்தகைய பெண்மையை பெருமைப்படுத்தி பாதுகாக்க வேண்டிய கடமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

**துணைநூற்பட்டியல்:**


1) கவிஞர் தங்கம்மூர்த்தி - பொய்யெனப் பெய்யும் மழை (பக் 27 )
2) கவிஞர் தங்கம் மூர்த்தி, தேவதைகளால் தேடப்படுபவன் ( பக் 66 )
3) கவிஞர் தங்கம் மூர்த்தி, பொய்யெனப் பெய்யும் மழை ( பக் 45 )
4) கவிஞர் தங்கம் மூர்த்தி, தேவதைகளால் தேடப்படுபவன் (பக் 38)
5) கவிஞர் தங்கம் மூர்த்தி, முதலில் பூத்த ரோஜா ( பக் 34 )
6) கவிஞர் தங்கம் மூர்த்தி , முதலில் பூத்த ரோஜா ( பக் 32 )
7) .த. குருநாதன் — பாரதிதாசன் பாடல்களில் பெண்மை ( பக்-104)
8) த. குருநாதன் — பாரதிதாசன் பாடல்களில் பெண்மை ( பக்-104)
9) அ.ச. ஞானசம்பந்தன் — இலக்கியக் கலை ( பக்-145)
10) கவிஞர் தங்கம் மூர்த்தி — பொய் என பெய்யும் மழை ( பக்-27,28)
11) தமிழண்ணல் — புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு ( பக்-488)
12) கவிஞர் தங்கம் மூர்த்தி — முதலில் பூத்த ரோஜா ( பக்-32)
13) ப.மருதநாயகம் — உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ( பக்-86)
14) கவிஞர் தங்கம் மூர்த்தி — என் பண்டிகையின் நாட்குறிப்பில் இருந்து(பக் - 35 )
15) சிற்பி பாலசுப்பிரமணியம் - ஆய்வுக் கோவை 2002 (பக் - 708 )
16) அப்துல் ரகுமான் - காற்று என் மனைவி பப்ளீசர்ஸ் 2002 , சென்னை 17 ( பக் - 95 )
17) அப்துல் ரகுமான் — காற்று என் மனைவி நேஷனல் பப்ளிசர்ஸ் 2002 சென்னை_17 ( பக்-95)

**பார்வை நூல்கள் :**


1.த. குருநாதன் — பாரதிதாசன் பாடல்களில் பெண்மை

2.அ.ச. ஞானசம்பந்தன் — இலக்கியக் கலை

3.கவிஞர் தங்கம் மூர்த்தி — பொய் என பெய்யும் மழை

4.தமிழண்ணல் — புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு

5.கவிஞர் தங்கம் மூர்த்தி — முதலில் பூத்த ரோஜா

6.ப.மருதநாயகம் — உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

7.கவிஞர் தங்கம் மூர்த்தி — என் பண்டிகையின் நாட்குறிப்பில் இருந்து

8. சிற்பி பாலசுப்பிரமணியம் - ஆய்வுக் கோவை 2002

9.அப்துல் ரகுமான் - காற்று என் மனைவி பப்ளீசர்ஸ் 2002 , சென்னை 17

10. அப்துல் ரகுமான் — காற்று என் மனைவி நேஷனல் பப்ளிசர்ஸ் 2002 சென்னை_17 ( பக்-95)


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் ARAN International e-Journal of Tamil Research

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2024, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com